Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 170

திங்கட்கிழமை 15 மே 2023

வைகாசி 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# இன்னோர் இனத்தை வெறுப்பேற்றி நினைவேந்தல் செய்யாதீர்கள்!!!

## ஜனாதிபதி ரணிலின் கோரிக்கை இது



**யாழ்ப்பாணம், மே 15**

**நினைவேந்தல் செய்வதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. ஆனால், இன்னோர் இனத்தை வெறுப்பேற்றும் வகையில் நினைவேந்தக் கூடாது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

»11

யாழ். பல்கலையினுள்

## இராணுவம், பிக்கு பங்கேற்புடன் நேற்று வெசாக் கொண்டாட்டம்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் மருத்துவபீடத்தில் நடந்தேறியது

யாழ்ப்பாணம், மே 15

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இராணுவத்தினர், பிக்கு »10

## குமுதினிப் படுகொலை நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், மே 15

குமுதினிப் படுகொலையின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவிலுள்ள நினைவாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.15 மணியளவில் நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டித் திருப்பலியும், சம »11

## திருமலையில் புத்தர் சிலை; நிறுவும் முயற்சி கைவிடல்!

போராட்டக்காரர்கள் அகன்றவுடன் பிக்குகள் வழிபாடு

யாழ்ப்பாணம், மே 15

திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்பாக தாய்லாந்திலிருந்து வரும் பிக்குகளால் 4 அடி புத்தர் சிலை நேற்று நிறுவுவதற்கான »11

## தமிழர் தாயகத்தின் எல்லையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், மே 15

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் தமிழர் தாயகத்தின் எல்லையாகவுள்ள அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. »11

போர்க்காலத்தில்

## அர்ப்பணிப்புடன் பணியாற்றிய மருத்துவர் சிவகுமாரன் மறைவு



யாழ்ப்பாணம், மே 15

போர்க்காலத்தில் பெரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய யாழ்ப்பாண மக்களின் மனதை வென்ற மருத்துவ நிபுணர் சபாரட்ணம் சிவகுமாரன் கொழும்பில் நேற்று »10

## உயர்பாதுகாப்பு வலயத்தினுள் கைவரிசை காட்டியோர் கைது

இராணுவத்தினருக்கு மதுபானம் கொடுத்து இரும்புப் பொருட்கள் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், மே 15

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து 780 கிலோ இரும்பைத் திருடிய குற்றச்சாட்டில் 8 பேர் காங்கேசன்துறை பொலிஸ் »11

## ரணில் – தமிழ் எம்.பி.க்கள் இரண்டாம் சுற்றுப் பேச்சு இன்று

யாழ்ப்பாணம், மே 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சு இன்று நடைபெறவுள்ளது. »11

வடக்கு - கிழக்கில்

## புத்தர் சிலை நிறுவ முடியாதா; எந்தச் சட்டத்தில் உள்ளது?

இப்படிக் கேட்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு, மே 15

விகாரைகளை நிறுவுவதற்கும் புத்தர் சிலைகளை வைப்பதற்கும் வடக்கு - கிழக்கில் அனுமதியில்லை என்று எந்தச் சட்டத்தில் உள்ளது? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் »11

வன்முறைக் கும்பல்

## பூம்புகாரில் கைது

கூலிப்படையாக 'வட்ஸப்பில்' விளம்பரம்

யாழ்., மே 15

பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய சிறுவர்களைஇணைத்துக்கொண்டு வன்முறைக் »11

கொழும்பு அரசியல் சதி:

## உணவுப்பொதி முன்பதிவே குழப்பத்துக்குக் காரணமாம்!

கொழும்பு, மே 15

கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர்கள் ஒன்றுகூடலுக்காக 2 ஆயிரம் உணவுப் பொதிகளுக்கு முன்பதிவு செய்யப்பட்டதை தவறாகப் புரிந்துகொண்டமையே கொழும்பின் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் அபிலாஷைக்கேற்ப தீர்வினைப் பெறவேண்டும்!

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

**கொழும்பு, மே 15**

**தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைப் பெறவேண்டும் என்பதே எமது இலக்காகும். அதற்காக அந்த மக்களின் பிரதிநிதிகளாக எமது பூரணமான பங்களிப்பு தொடரும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யும் வகையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நீண்டகாலமாகவே உறுதியாக இருக்கின்றோம், அதுவே எமது இலக்காகவும் உள்ளது. அந்த இலக்கை அடைவதற்காக நாம் கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி வந்துள்ளோம். எதிர்காலத்திலும் அந்தவிதமான செயற்பாட்டையே பின்பற்றுவதற்குள்ளோம்.

அந்தவகையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்வதற்காக எம்மை அழைத்துள்ளார். எம்மைப் பொறுத்தவரையில் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தாது விட்டவர்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாக தயாரில்லை. அதேநேரம், தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான வழிகளைத் தேடும் நிலைமைகளே காணப்படுகின்றன. ஆகவே, இந்தச் சந்தர்ப்பம் இனப்பிரச்சினை தீர்வைக் காண்பதற்கு உகந்தது அல்லவா என்று கூறமுடியாது. பொருளாதாரரீதியாக நாடு முன்னேறவேண்டுமாயின் உள்நாட்டில் அமைதியும், நிரந்தரமான சமாதானமும் நிலைநாட்டப்படவேண்டும் என்பதே அடிப்படையான விடயமாகும்.

முஸ்லிம் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைகளுக்கு உரித்துடையவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடயங்களில் நியாயமாக, நீதியாக நடந்துகொள்வதற்கு நாம் எப்போதுமே உறுதியாகவுள்ளோம், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை நாம் அறிந்துள்ளோம். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் நாம் சாதகமான முறையில் சிந்திக்கின்றோம் - என்றார். (ம)

# நாடுமுழுவதும் குற்றங்களைத் தடுக்க பொலிஸ் களமிறக்கம்

கொழும்பு , மே 15

குற்றங்களைத் தடுப்பதற்கான விசேட செயற்றிட்டம் நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான விசேட சுற்றறிக்கை பொலிஸ்மா அதிபரால் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை எதிர்வரும் 15ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதன்படி இன்றையதினம் நாடெங்கிலும் பல சிறப்புச் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இதயசுத்தியுடன் அழைத்தால் பேச்சுக்கு செல்வதற்குத் தயார்

## ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மே 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சை மேற்கொள்வதற்காக இதயசுத்தியுடன் அழைப்பு விடுத்தால் நாம் அதில் பங்கேற்பதற்குத் தயாராகவுள்ளோம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தரப்புக்களை அழைத்துள்ளமை தொடர்பாகவும், தமிழ் - முஸ்லிம் தரப்புக்களுக்கு இடையிலான சுமுகமான பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுமா? என்பது தொடர்பிலும் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வைக் காண்பதற்காக இதயசுத்தியுடன் எமக்கு அழைப்பு விடுக்கும் பட்சத்தில் நாம் அதில் பங்கேற்பதற்குத் தயாராகவுள்ளோம். குறிப்பாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, உள்நாட்டுக்கும், வெளிநாட்டுக்கும் காண்பித்து அதன் ஊடாக அரசியல் நன்மைகளை அடைவதற்கான முனைப்பினைச் செய்வது முழுமையாகத் தவிர்க்கப்படவேண்டும். இந்தவிடயத்தில் அனைத்துத் தரப்பினரும் உறுதியாக இருக்கவேண்டும்.

தற்போது ஏற்பட்டிருக்கின்ற தருணமானது இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான மிகப்பொருத்தமானதொரு தருணமாகும் என்றே நாம் கருதுகின்றோம். அவ்வாறான நிலையில் தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீடித்துக்கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்மக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற சில நெருடல்களுக்கு, இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிரந்தரமான தீர்வுகளைக் காணவேண்டும்.

தேர்தல் அரசியலுக்கு அப்பால் இந்த விடயத்தில் உள்ள யதார்த்தங்களை இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (ம)

# நாட்டில் பரவலாக மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மே 15

நாட்டில் பரவலாக மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடுமுழுவதும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# தங்கத்தின் விலை வீழ்ச்சி

இலங்கையில் தங்கத்தின் விலை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கொழும்பு - செட்டியார்தெரு தங்கச் சந்தையில் நேற்றுக் காலை ஒரு பவுண் '22 கரட்' தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 600 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. இதேவேளை- கடந்த வெள்ளிக்கிழமை ஒரு இலட்சத்து 74 ஆயிரம் ரூபாவாக இருந்த ஒரு பவுண் '24 கரட்' தங்கத்தின் விலை தற்போது ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 500 ரூபாவாகக் குறைந்துள்ளது. (ம)

# வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி ஆரம்பம்!

கொழும்பு, மே 15

வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனாப் பெருந்தொற்று மற்றும் அரசியல் உறுதித்தன்மை அற்றநிலை காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக வீடுவீடாகச் சென்று தகவல் சேகரிப்பதை நிறுத்த கிராம சேவகர்கள் முடிவு செய்திருந்தனர்.

எனினும் இந்த வருடம் இந்தப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம சேவகர்கள் வீடுகளுக்குச் செல்லும்போது பொதுமக்கள் வீட்டில் இல்லை என்றால், உடனடியாக கிராம சேவகர்களை அணுகி தகவல்களைத் தெரிவிக்கவேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ம)

# இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, மே 15


இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பில் உரிய முடிவுகள் எடுக்கப்படும். இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பான அறிக்கை அடுத்தமாதம் சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார்.

நாட்டில் டொலர் இருப்பைத் தக்கவைப்பதற்காக இறக்குமதிப் பொருள்களைத் தடைசெய்யும் அறிவிப்பை கோத்தாபய அரசாங்கத்தின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச விடுத்திருந்தார். கோத்தாபயவின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர் இந்தத் திட்டம் ரணில் அரசாங்கத்திலும் தொடர்ந்து பேணப்பட்டு வந்தது. எனினும் அண்மைக் காலமாக இறக்குமதிப் பொருள்களுக்கான தடையில் தளர்வுப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு அருகில் நேற்றையதினம் குருதிக்கொடை முகாமொன்று முன்னெடுக்கப்பட்டது. (ம)

# பொதுச்சொத்து ஆக்கிரமிப்பு: போராடி மீட்ட பொதுமக்கள்!

## சாவகச்சேரியில் சம்பவம்

**யாழ்ப்பாணம், மே 15**

**சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட இராமாவில் - தாவளை - இயற்றாலை ஊறெல்லை வீதியையும், கமநல சேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான குளத்தின் ஒருபகுதியையும் அபகரித்து தனிநபர் ஒருவர் எல்லையிட்டிருந்த நிலையில், அவற்றை பொதுமக்கள் தன்னெழுச்சியாக இணைந்து போராட்டம் நடத்தி மீட்டுள்ளனர்.**

சாவகச்சேரி பிரதேசசபையின் பிரதான வாயிலை மறித்து அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள், பாடசாலை மாணவர்கள், முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன், முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிசோர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திலகராணி உட்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக 2020ஆம் ஆண்டு சாவகச்சேரி பிரதேசசபை, கமநல சேவைகள் திணைகளம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் என்பவற்றில் பொதுமக்களால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாக குளத்தின் அரைவாசிப் பகுதியும், வீதியில் சுமார் 100 மீற்றர் அளவான பகுதியும் அந்தத் தனிநபரால் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு எல்லையிடப்பட்டமை தெரியவந்தது.

2022ஆம் ஆண்டு டிசெம்பரில் மக்கள் பாவனைக்காக வீதி திறக்கப்பட்டது. எனினும், வீதி திறந்துவிடப்பட்ட சில நாள்களிலேயே குறித்த தனிநபரால் மீண்டும் அந்த வீதியும் குளமும் முட்கம்பி வேலியிட்டு அடைக்கப்பட்டது. இதனால் மக்களும், மாணவர்களும் குளத்தினூடாகவே பயணம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் குறித்த வீதியை மீட்டுத்தருமாறு பிரதேசசபையிடம் பலதடவைகள் முறையிட்டும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் நேற்றுமுன்தினம் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவ இடத்துக்குப் பொலிஸாரும் திணைக்கள அதிகாரிகளும் வந்ததை அடுத்து, அவர்களின் அனுமதியுடன் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட பகுதியில் இடப்பட்டிருந்த எல்லைக் கற்கள் அகற்றப்பட்டன. இதையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது. (ம-9)

## புதையல் தோண்ட முற்பட்ட அறுவர் முல்லையில் கைது

முல்லைத்தீவு, மே 15

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட கனகரத்தினபுரம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட குற்றச்சாட்டில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

கனகரத்தினபுரம் பேராற்றை அண்மித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரித்தான இடத்தில் புதையல் தோண்டப்படுவதாக நேற்றுமுன்தினம் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே, புதையல் தோண்ட முற்பட்ட குழுவை பொலிஸார் கைதுசெய்தனர்.

அவர்களிடமிருந்து புதையல்தோண்ட பயன்படுத்தப்பட்ட சுத்தியல், மண்வெட்டி மற்றும் தொல்பொருள் ஆபரணம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் கனகபுரம், மாத்தளை மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் சான்றுப்பொருள்களுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 23ஆம் திகதிவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-19)

## முல்லைத்தீவில் விபத்து 3 மாணவர்கள் காயம்!



முல்லைத்தீவு, மே 15

வீதியில் நடந்து சென்ற மாணவர்களை மோதித்தள்ளி வாகனமொன்று விபத்துக்குள்ளாகியதில் 3 மாணவர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் முல்லைத்தீவு - பேராறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை வீதியில் பயணித்த பட்டா ரக வாகனமொன்று, நாய் குறுக்கே பாய்ந்ததில் புரண்டு அண்மையில் விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான வாகனத்தை வவுனியா நோக்கி ஏற்றிச் சென்ற வாகனமே மாணவர்களை மோதித்தள்ளியுள்ளது.

இதில் காயமடைந்த சிறுவர்கள் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கும் வவுனியா மருத்துவமனைக்கும் மாற்றப்பட்டுள்ளனர். வாகனத்தைச் செலுத்திய சாரதி தப்பியோடியுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-19)





ஓ.எல். எக்ஸாம் கிட்ட வந்திட்டுது. அதால கடைசிக்கட்டத் தயார்ப்படுத்தலில எல்லாரும் இறங்கியிருக்கினம். இப்பிடி கடைசிநேரத் தயார்ப்படுத்தலில ஒன்டுதான் முன்னோடிப்பரீட்சை. எக்ஸாமுக்கு எப்பிடியான கேள்வியள் வருமெண்டு மாஸ்ரர்மார் மண்டையை உடைச்சு யோசிச்சு, அதுக்கேத்தபடி எக்ஸாம் பேப்பர் ஒண்டு ரெடி பண்ணி பிள்ளையளுக்கு எக்ஸாம் வைப்பினம். முன்னோடிப் பரீட்சையில வாற ஒண்டிரண்டு கேள்வியோ இல்லாட்டி அதே மொடலில வேற கேள்வியோ ஓ.எல். எக்ஸாமிலயும் கூடுதலாவரும். அப்பிடி வந்தால் பாஸ் பண்ணுற வீதம் கூடும். இப்பிடியான நல்ல அடைவைப் பெறவேணுமெண்ட நோக்கத்தில தொடங்கின முன்னோடிப் பரீட்சையளை இப்ப ஏதோ கடமைக்குத்தான் சிலர் வைக்கினம். உள்ளி கிடைக்கிற இடத்தில பிள்ளைப் பெறுகிறமாதிரி, கையில ஏப்பிட்ட எக்ஸாம் பேப்பர் ஒண்டில் முன்னோடிப் பரீட்சை எண்ட லேபிளை ஒட்டி வைக்கினம். அதால அவைக்கும் நன்மையில்லை, பிள்ளையளுக்கும் நன்மையில்லை. நேரமினக்கேடுதான் மிச்சம்.

இப்பிடித்தான் போன வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண வலயம் , ஆங்கில பாடத்துக்கு ஒரு முன்னோடி எக்ஸாம் வைச்சுது. அந்தப் பேப்பரைப் பார்த்த பிள்ளையளுக்கு தாங்கள் பள்ளிகூடத்தில இருக்கிறமோ இல்லாட்டி ரியூசனில இருக்கிறமோ எண்டு டவுட் வந்திட்டுது. ஏனெண்டால், அதே ஆங்கிலப்பாடப் பேப்பரை கொஞ்சநாளைக்கு முதல்தான் அந்தப் பிள்ளையள் சிலபேர் தாங்கள் படிக்கிற ரியூசனிலயும் செய்தவை. ரியூசனில செய்த எக்ஸாம் பேப்பருக்கும் , யாழ்ப்பாண வலயம் அடிச்சுக் குடுத்த பேப்பருக்கும் ஒரு எழுத்துக்கூட வித்தியாசமில்லை. மேல மட்டும் ரியூசன்ர பேருக்குப் பதிலா வலயத்தின்ர பேரும், இப்ப எக்ஸாம் நடக்கிற திகதியும் மட்டும்தான் மாற்றம். மிச்சமெல்லாம் அப்பிடியே ஈயடிச்சான் கொப்பிதான். அதைவிட இந்தப் பேப்பர் அந்த ரியூசனில ரண்டு மூண்டு வருசத்துக்கு முதலே குடுத்த பேப்பராம். அந்தப் பேப்பரை ஒவ்வொரு வருசமும் ஆங்கிலப்பாடம் படிப்பிக்கிறவர் குடுப்பார். அப்பிடித்தான் ரண்டு வருசத்துக்கு முதல் தயாரிச்ச பேப்பரை இந்தமுறை ஓ.எல். எடுக்கப்போறவைக்கும் அந்த ரியூசன் மாஸ்ரர் குடுத்திருக்கிறார். அதால தான் வலயத்தில முன்னோடிப்பரீட்சைக்கு வைச்ச பேப்பரும், ரியூசன் பேப்பரும் ஒண்டுதான் எண்ட உண்மை வெளியில வந்தது.

இப்ப கேள்வியென்னெண்டால், ரியூசனில வைச்ச பேப்பரை முன்னோடி எக்ஸாமுக்கு ஆர் 'செட்' பண்ணினது? சிலவேளை ரியூசனில இந்தப் பேப்பரை செட் பண்ணினவர்தான், வலயத்துக்கும் குடுத்தாரோ தெரியாது. இல்லாட்டி வலயக்காரரின்ர கையில இந்தப் பேப்பர் சிக்கினதால, நோகாம நொங்கு குடிக்கிற பழக்கத்தில அதை ஆராயாமல் அடிச்சிருக்கவும் கூடும். அப்பிடியும் இல்லாட்டி ரியூசனில வைச்ச பேப்பரை ஆர் கண்டுபிடிக்கப் போயினம் எண்ட அலட்சியத்தாலையும் அப்பிடிச் செய்திருக்கலாம். இப்ப இந்த விசயம் வெளியில வந்ததால, எப்பிடி ரியூசனில வைச்ச பேப்பர் வலயப் பரீட்சைக்கு குடுபட்டது எண்டு ஆராய ஒரு குழு அமைச்சிருக்காம்.

இப்பிடி எத்தனை குழுக்களை இதுக்கு முன்னமும் அமைச்சுப் போட்டினம். இந்தக் குழுக்களின்ர தூண்டிலில ஒரு புழுக்கூட மாட்டுப்படேலையே. இதுவும் அப்பிடித்தான் ஆறின கஞ்சியாக்கி அப்பிடியே பழங்கஞ்சியாக்கிறதுக் காகத்தான் விசாரணைக்குழு அது. இதெண்டு காலத்தைக் கடத்து கினம் போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை விரிவாக்கம்: மன்னார் மக்கள் எதிர்ப்பு

## பிரஜைகள் குழு தெரிவிப்பு

**மன்னார், மே 15**

**மன்னார் காற்றாலைச் செயற்றிட்டத்தின், விரிவாக்கத்துக்கு பொதுமக்களின் எழுத்துமூல அபிப்பிராயம் கோரப்பட்டுள்ள நிலையில் அந்த நடவடிக்கைக்கு மன்னார் மாவட்டத்திலிருந்து 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் என மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.**

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் மாதாந்த ஆளுநர் சபைக் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சாரசபையால் மன்னார் - தம்பவனி காற்றுச் சக்தி செயற்றிட்டம் விரிவுபடுத்தப் படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் முதலாம்கட்ட விரிவாக்கமாக கொள்ளளவை மேம்படுத்துவதற்கான திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதனால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என்று கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்தது.

அதற்கமைய பொதுமக்களின் கருத்துக்களை கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி முதல் 30 நாள்களுக்குள் கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்துமூலமாக சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

அறிவுறுத்தலுக்கமைய மன்னார் மாவட்டத்திலிருந்து ஏழாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள், மன்னார் காற்றாலை செயற்றிட்டத்தின் கொள்ளளவை விரிவுபடுத்தப்படவேண்டாம் என தங்கள் கையெழுத்துடனான கடிதங்களை மன்னார் பிரஜைகள் குழுவினூடாக சமர்ப்பித்துள்ளனர்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து இன்னமும் பதில்கள் கிடைக்கப்பெறவில்லை என மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது. (ச-60,213)

## தென்மராட்சியிலுள்ள விவசாய நிலங்களின் தரவுகள் சேகரிப்பு

சாவகச்சேரி, மே 15

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள விவசாய நிலங்களின் தரவுகளை, அந்தந்த கமக்கார அமைப்புக்கள் ஊடாக சேகரித்து வழங்குமாறு கமநல சேவைகள் நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

இதற்கான படிவங்களை அவர்கள் தத்தமது பிரிவு கமக்கார அமைப்பிடம் பெறலாம்.

அந்தப் படிவத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வங்கிக் கணக்கு இலக்கம், மின்னஞ்சல் முகவரி, காணியின் பெயர், காணியின் பரப்பளவு உள்ளிட்டவற்றை பதிவுசெய்து வழங்குங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கைதடி - நாவற்குழி கமக்காரர் அமைப்புக்குட்பட்ட விவசாயிகளின் பதிவுகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் இடம்பெற்று வருகின்றன என அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (ச-9)

## மாட்டுடன் மோதி ஒருவர் காயம்!

சாவகச்சேரி, மே 15

வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்தார்.

கைதடிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இந்த விபத்தில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-9)

## கசிப்பு காய்ச்சிய இருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 15

மானிப்பாய் - ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய இரண்டு நபர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து 6.5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றன. (ய)

## சாவகச்சேரிப் பகுதியில் டெங்குச் சோதனைகள்!

சாவகச்சேரி, மே 15

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக டெங்கின் தாக்கம் யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் தீவிரமடைந்துள்ளது. யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குப் பாதிப்பு அதிகமாகக் காணப்படும் இடங்களில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய மந்துவில் கிழக்கு மற்றும் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஆகிய இடங்கள் எதிர்வரும் வாரம் பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளன. இந்தப் பிரிவுகளிலுள்ள மக்கள் தமது குடியிருப்புக்கள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## வட்டுக்கோட்டை - மூளாய் வீதி திருத்தப்படுவது எப்போது?

**வாசகர் கடிதம்**

வட்டுக்கோட்டை - மூளாய் வீதியின் அவலநிலை தொடர்பாகப் பலரும் பல வழிகளில் போராட்டம் செய்தனர். ஆனால், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த வீதியால் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் அடிக்கடி சென்று வருகின்றனர். அவர்கள்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர்கூட பயணம் மேற்கொண்டிருந்தார். இந்த வீதியால்தான் மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் செல்வது வழக்கம். அவர்களும் பெரும் சிரமத்துக்கு மத்தியில்தான் செல்கின்றனர்.

மருத்துவமனையிலிருந்து நோயாளியை யாழ். மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களையே சந்திக்க வேண்டியிருக்கின்றது. எனவே, இந்த வீதியின் முக்கியத்துவம் கருதி வீதியிலுள்ள பெரும் பள்ளங்களையாவது நிரவி, தற்காலிகப் புனரமைப்பையாவது ஏற்படுத்தித் தருமாறு அதிகாரிகளைக் கோருகின்றோம்.

[illegible]
மூளாய்வீதி, வட்டுக்கோட்டை

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** ஆதாயம் கிடைக்கக்கூடும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். பல வகைகளிலும் அனுகூலமான நாள். சங்கடங்கள் நீங்கும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தேவையான அளவுக்குப் பணம் இருப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**கடகம்:** பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பாதிப்பு இருக்காது. நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் நன்மை ஏற்படும். மகாவிஷ்ணுவை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கன்னி:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நாள். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே பாசம் அதிகரிக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இடைவிலகல் தூரவிலகட்டும்!

பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களின் விவரங்களைக் கோரியிருக்கின்றார் வடமாகாண ஆளுநரான ஜீவன் தியாகராஜா. யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இதில், பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகும் சந்தர்ப்பங்கள் மிகையாக அதிகரித்துள்ளன என்ற குற்றச்சாட்டு பூதாகரமாக முன்வைக்கப்பட்ட பின்னணியிலேயே, மேற்படி விவரங்கள் ஆளுநரால் கோரப்பட்டிருக்கின்றன. அத்துடன், பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்கள், சமூகத்தில் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என்ற அவதானிப்பு இடம்பெறவேண்டுமென்றும் அறிவுறுத்தியிருக்கின்றார் ஆளுநர்.


வடக்கு மாகாணத்தில் மாணவர்களை மையப்படுத்திய போதைக் கலாசாரங்கள் அண்மைக்காலமாக மிகையாக அதிகரித்திருக்கின்றன. மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் விரவியிருப்பதற்கும், அவர்கள் தம் கற்றல் செயற்பாடுகளைக் கைவிட்டு பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்றமைக்கும் இடையிலான தொடர்பென்பது நேரடியானது. போதைப்பொருள் கலாசாரத்தால் ஒரு மாணவன் கற்றலை இடைநிறுத்துகின்றான் என்றால், இடைவிலகலின் பின்னர் அந்த மாணவன் அந்தப் பேரரக்கத்தனத்துக்குள் ஆட்படும் வீச்சு பலமடங்கு அதிகரிக்கும், இதுவே யதார்த்தம். யாழ்ப்பாணத்திலும் சரி, வடக்கின் இதர பகுதிகளிலும் சரி கஞ்சா, ஹெரோய்ன், மாவா இவ்வாறான போதைப்பொருள்களுடன் கைதாகும் நூற்றுக்கணக்கானோரில் பலர், பாடசாலைப் பருவத்தைக் கடந்தும் கடக்காமலும் இருப்போர்தான். கற்றலில் இருந்து இடைவிலகியோர்தான். ஆதலால், பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் மீது பார்வை செலுத்தப்படவேண்டும் என்ற ஆளுநரின் கருத்தை எத்தனை பாராட்டினாலும் தகும். ஆனால், வெறுமனே புள்ளிவிவரங்களை மட்டும் திரட்டிவிட்டு, அதை அறிக்கையாக்கி அனுப்பிவிட்டு, தம் பணி முடிந்தது என ஆளுநர் இருப்பாரானால், எதுவுமே மாறப்போவதில்லை. மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை நிவர்த்தித்து, மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் பணிகளை முன்னெடுக்கவும் ஆளுநர் முயலவேண்டும்.

அதேநேரம், போதைப்பொருள் பாவனைக்கு ஆட்பட்டு மறுவாழ்வுக்கு அனுப்பப்படும் மாணவர்களில் பலர் மீண்டும் மீண்டும் போதைப்பொருள் பாவனைக்கு தம்மை அடிமையாக்கி கற்றலை முடிவுறுத்துகின்ற நிலையும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனின் அந்த மறுவாழ்வால் என்ன நன்மை? 18 வயதுக்குக் குறைந்த சிறுவனோ அல்லது சிறுமியோ போதைப்பொருள் பாவனைக்கு ஆட்பட்டால், அவருக்கு எவ்வாறு அந்தப் பொருள் கிடைத்தது? என்ற வழிகள் ஆராயப்படவேண்டும். மிகச் சாதாரணமானதும் இலகுவானதுமான அணுகல்கள் மூலம் போதைப் பொருளைப் பெற்றுக்கொள்ளும் 'சபிக்கப்பட்ட' நிலை இல்லாமற்செய்யப்படும்போதுதான் இந்தப் புனர்வாழ்வென்பது அர்த்தமுள்ளதாக அமையும். இது நீண்டதும் பரந்துபட்டதுமான திட்டம். இதை நடைமுறைப்படுத்துவதென்பது அத்தனை கடினம். மாறாக நடைமுறைப்படுத்தப்பட்டால், அதன் பலாபலன்கள் கண்முன் தனித்துத் தெரியும். ஆதலால், 'வாய்ச்சொல்லில் வீரரடி கிளியே' என்றவாறாக அல்லாமல், இந்தத் திட்டத்துக்கு முழுமூச்சுடன் செயல்வடிவம் கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் பொதுமக்களின் எதிர்பார்ப்புமாகும்.

கற்றலில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் தொடர்பில் சிறப்புப் பொறிமுறையொன்று மாகாணம் தழுவிய ரீதியில் வடக்கில் ஏற்படுத்தப்படவேண்டும். போதைப்பொருள் மட்டுமல்ல வறுமையும் இந்த இடைவிலகல்களுக்குப் பிரதானமான காரணமாகவே அமைகின்றது. வறுமையால் ஒரு மாணவன் இடைவிலக நேரிடுகின்றது என்றால் சிறப்பு உதவித் திட்டங்கள் மூலமாக அந்த மாணவனுக்கு உதவும் வகையிலான திட்டங்கள் உருவாக்கப்படுவது அவசியம். போரால் நேரடிப் பாதிப்பை எதிர்கொண்ட மாகாணம் என்ற ரீதியில் இது வடக்குக்குத் தவிர்க்க முடியாததாகவுள்ளது. ஆதலால், வெறுமனே அறிக்கை கோருவதுடனும், உத்தரவுகளைப் பிறப்பிப்பதுடனும் இருந்துவிடாது, இடைவிலகல்களைத் தவிர்க்க – குறைக்க ஏதுவான அத்தனை சாத்தியத் திட்டங்களையும் செயற்படுத்துவதே ஆளுநருக்கும் அதிகாரிகளுக்கும் முன்புள்ள பொறுப்பும் கடமையுமாகும்.

## நாளொரு நல்வார்த்தை

"உங்கள் போட்டியாளர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுங்கள், ஆனால், அவர்களைப் பிரதி செய்யாதீர்கள்." - ஜாக் மா




## சர்வதேச நாணய நிதியத்தின்
# 90 வீதமான நிபந்தனைகளை நீதி அமைச்சு நிறைவேற்றியது

**கொழும்பு, மே 15**

**சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகளைப் பெறுவதற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் 90 வீதமான நிபந்தனைகள் நீதி அமைச்சாலேயே நிறைவேற்றப்பட்டன என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் அனைவரும் ஒவ்வொரு மட்டத்திலிருந்து நாட்டு மக்களுக்குச் சேவையாற்றி வருகிறோம்.

நாம் வகிக்கும் பதவியும், எமக்குரிய பொறுப்புக்களும் வேறுபடலாம். இருப்பினும், எம் அனைவரினதும் இலக்கு ஒன்றுதான். எமது நாட்டில் இல்லாத வளம் என்று எதனையும் கூறமுடியாது. எம்மிடம் உள்ள வளங்கள் இந்தியாவில்கூட இல்லை. இருப்பினும், நாம் இன்னமும் உரிய இடத்தை அடையவில்லை. ஜப்பான், கொரியா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள் பொருளாதாரரீதியில் எம்மை விடவும் பின்னடைவான நிலையிலேயே இருந்தன. ஆனால், நாமோ சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதென்பது ஏனைய நாடுகளுக்கு இலகுவானதொரு விடயமாக இருக்கவில்லை. இருப்பினும், இலங்கையை பொறுத்தமட்டில் நிதியமைச்சும் திறைசேரியும் மிகச் சரியாக செயற்பட்டு, இந்தக் கடனுதவிக்கான இணக்கப்பாட்டை எட்டியிருக்கின்றன என்ற எண்ணம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

ஆனால், இந்த விடயத்தில் நீதியமைச்சு சரியாகச் செயற்பட்டிருக்காவிட்டால் இந்த இணக்கப்பாட்டை எட்டுவதில் மேலும் ஒரு வருட காலதாமதம் ஏற்பட்டிருக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதமான நிபந்தனைகளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் நீதியமைச்சினாலேயே முன்னெடுக்கப்பட்டன - என்றார். (ம)

# மேலும் இரண்டு பேர் கொரோனாவால் பலி!

கொழும்பு, மே 15

இலங்கையில் மேலும் இரண்டு பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவால் கடந்த 12ஆம் திகதி இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் பதிவான கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 853ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை- இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குட்பட்டோர் எண்ணிக்கை 6 இலட்சத்து 72 ஆயிரத்து 283ஆகப் பதிவாகியுள்ளது. (ம)

**நாளை** 16.05.2023 செவ்வாய்க்கிழமை வைகாசி 02


சுபநேரம் : 10.23 - 11.53

ராகுகாலம் : 02.53 - 04.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிகழ்வுகள் அதிபர் தலைமையில் கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் "கல்லூரியை அறிவோம்" எனும் கருப்பொருளில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிக்கான பரிசளிப்பு நடைபெற்றது. (ய-66)



குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா கடந்த 4ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. (ய-66)



சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கக் கிளையினரின் ஏற்பாட்டில் தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரத்தில் நலிவுற்ற 6 மாணவர்களுக்கு மாதாந்தம் 2,500ரூபா பெறுமதியான உதவித் தொகை கொடுப்பனவு கடந்த 8ஆம் திகதி வழங்கப்பட்டது. (ய-113)



## விழிப்புணர்வு

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நவாலி வடக்கு கலைமகள் முன்பள்ளிச் சிறார்களுக்கு கழிவு முகாமைத்துவம், ஒழுக்கம், போதையற்ற உலகம் ஆகிய தலைப்புக்களில் விழிப்புணர்வு நிகழ்வு சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் போதைத் தடுப்பு உத்தியோகத்தர்களால் கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. (ய-66)



சாவகச்சேரி - சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் மேற்படி நிலைய மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
யாழ்.போதனா மருத்துவமனை குருதிக் காப்பக மருத்துவர்கள் குருதியைப் பெற்றுக்கொண்டனர். (ய-9)

## மரநடுகை




தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகள் கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை நாட்டி வைக்கப்பட்டன. (ய-113)



## செயற்றிட்ட உதவிகள் வழங்கல்

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மலையக மக்களுக்கு 8 லட்சத்து 13 ஆயிரம் ரூபா பெறுமதியான பல்வேறு செயற்றிட்ட உதவிகள் வழங்கப்பட்டன.
பதுளை - தெமோதரை சௌதம் தமிழ் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 75 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. உயர்தரக் கற்றல் செயற்பாட்டுக்காக பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவிக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது. நிவ்பர்க் தோட்டம் எல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பாலவிநாயகர் ஆலய கட்டப் பணிக்காக 1லட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.
அண்மையில் பூனாகலை கபரகலை கிராமத்தில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.
சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் இணைந்து மேற்படி உதவிகளை நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (ய-66)



முல்லைத்தீவு - அக்கராயன் குளத்தடிப் பகுதியில் 10 வீட்டுத்திட்டப் பயனாளிகளின் கோரிக்கைக்கமைய கனடா மொட்ரோலன் மீடியா ஊழியர்களின் பங்களிப்பில் யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் லயன் கலாநிதி நா.தனேந்திரனால் குழாய்க்கிணறு அடித்து பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது. (ய)



சுழிபுரம் மேற்கு ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வளாகத்தில் சுழிபுரம் மேற்கு கலைமகள் அறநெறி பாடசாலையின் ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (ய-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானிகள் எச்சரிக்கை

# வெப்பம் அதிகரிக்கும்

வொஷிங்டன், மே 15

பூமியில் வெப்பத்தை அதிகரிக்கும் எல் - நினோ விளைவு இந்த ஆண்டின் பிற்பகுதியில் வரக் கூடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

எல் - நினோ விளைவு எனில் நீண்ட கால சராசரியைவிட வெப்பம் 0.8 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கும். கிழக்கு பசுபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை அண்டி எல் - நினோ உருவாகி வருகிறது.

இது இயல்பைவிட வலுவாக மாறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என அமெரிக்க தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு தெரிவித்துள்ளது.



அமெரிக்கா உட்பட உலகெங்கிலும் இந்த ஆண்டின் பிற்பகுதியிலும் அடுத்த ஆண்டிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இதனால் உலக சராசரி வெப்பநிலை மேலும் உயரக்கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# பியரில் இயங்கும் மோட்டார் சைக்கிள்

எரிபொருளுக்குப் பதிலாக பியரில் மணிக்கு 240 கிலோமீற்றர் வேகத்தில் இயங்கக்கூடிய மோட்டார் சைக்கிள் உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, மினசோட்டா மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள் அனைவரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்த மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளுக்குப் பதிலாக பியர் பயன்படுத்தப்படுகிறது. கூடுதலாக வெப்பமூட்டும் சுருளுடன் கேலன் கெக் கொண்டு இயக்கப்படுகிறது. இந்தச் சுருள் பியரை 300 டிகிரி வரை சூடாக்குகிறது. பின்னர் அது மோட்டார் சைக்கிளை முன்னோக்கி நகரச் செய்யும் முனையில் அதிக வெப்பமான நீராவியாக மாறி இயங்கச் செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 . 06 . 1945 | 14 . 05 . 2023 |

**சிவலிங்கம் லோகாம்பிகை (ராசாத்தி)**

வட்டுத் தென்மேற்கு வட்டுக் கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் லோகாம்பிகை நேற்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் சரஸ்வதி தம்பதியினர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன், தில்லையம்பலம் மற்றும் தாளநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தம்பிராசா சிவலிங்கத்தின் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சிவதரன் (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சங்கானை), கேதீஸ்வரன் (சேய்) ஆகியோரின் அன்புத் தாயும், தவச்செல்வி, புஸ்பாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்சிகா, ஹரிசன், தர்சிகா, தரணிகா, ஜெனகன், சன்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி வீதி,
வட்டுத் தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

077 549 1462 (தரன்)
077 438 6508 (சேய்)

தகவல்:
குடும்பத்தினர்.



சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 04 உரும்பிராய் சொக்கநாதர் சிவாலயப் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ய)



யா/டிறிபேக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் க. அருந்தவபாலன் தனது துணைவியின் நான்காவது ஆண்டு நினைவையொட்டி சாவகச்சேரி - மிருசுவில் அ.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை, மற்றும் தனங்களப்பு அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் 58 மாணவர்களுக்கு கடந்த 8ஆம் திகதி கற்றல் உபகரணங்கள் வழங்கினார். (ய-9)

# பாகிஸ்தானில் பேஸ்புக், ருவிற்றர் தடை நீடிப்பு

இஸ்லாமாபாத், மே 15

பேஸ்புக், ருவிற்றர் ஆகிய சமூகவலைத் தளங்களுக்கான தடை பாகிஸ்தானில் நீடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானை கடந்த 9ஆம் திகதி அந்த நாட்டின் துணை இராணுவத்தினர் அதிரடியாகக் கைது செய்தனர். அதனால் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டதை தொடர்ந்து பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட தோடு நாடு முழுவதும் இணைய சேவை துண்டிக்கப்பட்டது.

பேஸ்புக், ருவிற்றர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது பாகிஸ்தான் முழுவதும் இணைய சேவை வழங்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் தொலைத்தொடர்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆயினும் பேஸ்புக், ருவிற்றர் ஆகியவற்றின் தடை நீக்கப்பட வில்லை என தொலைத்தொடர்பு ஆணையம் கூறியுள் ளது. (ச-இ)

## INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.)(Bid fee) | Security Deposit (Rs.) | Validity Periodof Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Dialysis Unit Store & Coverdway to Rehabilititation Center. | 500.00 | 117,000.00 | 91 | 5.8 | C7 |
| 2. | Landscaping Infront of A&E Building & Repairing works at OPD Toilet. | 500.00 | 48,000.00 | 91 | 2.3 | C 8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 16.05.2023 up to 30.05.2023 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 31.05.2023, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
15.05.2023.

(cr.39876 (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி இல்லாது பேருந்து சேவை

உலகில் முதல்முறையாக ஓட்டுநர் இல்லாமல் பயணிக்கும் தானியங்கி பேருந்து சேவை இங்கிலாந்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து ஸ்கொட்லாந்தின் ஃபோர்த் பாலத்தின் வழியாக பயணிகளை ஏற்றிக்கொண்டு தனது முதல் பயணத்தைத் தொடங்கி யுள்ளது.

இந்தத் தானியங்கி பேருந்துகள் ஓட்டுநர் இல்லாமல் தானே இயங்கும் வகையில் தொழில்நுட்பத்தின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஓட்டுநர் இல்லாமல் பயணம் செய்வது முற்றிலும் பாதுகாப்பானது என பேருந்து நிறுவனம் உறுதியளித்துள்ளது.

(ச-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 08 . 1969



இறப்பு 10 . 05 . 2023

### கந்தசாமி கிருஸ்ணாகரன் (கிரி)

ஜயனார் கோவிலடி மல்லாகத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் அன்ரோனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிருஸ்ணாகரன் (கிரி) கடந்த (10.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி செல்வரத்தினம் தம்பதியரின் மகனும், இரட்ணவடிவேல் அமரர் சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், ஜீவரதியின் அன்புக் கணவரும், கிருஷா, ராகுல் ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன் (லண்டன்), கருணாவதி, சுபாஸ்கரன் (பிரான்ஸ்), கலாவதி (லண்டன்), சுமணாவதி (லண்டன்), சுமணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (17.05.2023) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சகோதரி:-கருணாவதி (ஆத்தை)
0033652156937
021 224 2157

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 15.04.2023 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகராசா கணேசமூர்த்தி

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய சமூகத்தினர் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்துக் கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.05.2023) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்பாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மூளாய், சுழிபுரம்.
(CR 39841)(K-1)
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 08 . 1936



மறைவு 12 . 05 . 2023

### திருமதி மகேஸ்வரி கந்தப்பர்

காங்கேசன்துறை, தையிட்டி கிழக்கு, விக்னேஸ்வரா வீதி, அரசடி பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வத்தளை, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி கந்தப்பர் கடந்த (12.05.2023) வெள்ளிக்கிழமைய இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Tea .maker சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - வள்ளிஆச்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கந்தப்பரின் அன்பு மனைவியும், Dr.வாசுகி மற்றும் தேவகி (ஆசிரியை ராமகிருஷ்ணா வித்தியாலயம் வெள்ளவத்தை), ஈசன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கண்மணி, கணேசபிள்ளை மற்றும் கணேசம்மா, சிவமயம், சரஸ்வதி, சத்தியதேவி, பத்மினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வைத்திய கலாநிதி Dr.மகேந்திரராஜா, Eng. சாந்தகுமார் (SLSI), குமுதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் Dr.ஸாம்பவி - சாரங்கன், காயத்ரி, பிரணவி, யஷ்வினி, ஹணவிகாஷ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், ஹரிணி, லக்ஷன் ஆகியோரின் பாசமுள்ள அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (No.591, Galle Road, Mt.Lavania) நேற்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் இன்று ( 15.05.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று 1.15 மணியளவில் தகனத்திற்காக கல்கிசை மயான பூமிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவமயம் ரமணன் (மருமகன்)
1-6472024000, 0726444430
(cs 39842) (N-1)
தகவல்:
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 01 . 1946



மறைவு 14 . 05 . 2023

### வைத்திய கலாநிதி சபாரட்ணம் சிவகுமாரன்

சுயம்பு வீதி, வலந்தலை காரைநகரை பிறப்பிடமாகவும், 105/3, சபுமல் பிளேஸ் இராஜகிரியவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி சபாரட்ணம் சிவகுமாரன் நேற்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் சபாரட்ணம், காலஞ்சென்ற லீலாவதி சபாரட்ணம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் காலஞ்சென்ற குலமணி சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகநாயகியின் அன்புக் கணவரும், சிவாம்பிகை (UK), வாமதேவன் (UK), சோமநாதன் (அவுஸ்திரேலியா), ராஜ்குமார் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற Dr. ஜெகதாசன், Dr. புவனேஸ்வரி, வாமதேவன் (UK), Dr.கலைவாணி சோமநாதன் (Australia), ரவீந்திரன் (UK) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.05.2023) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் 105/3, சபுமல் - பிளேஸ் இராஜகிரியவில் உள்ள வசிப்பிடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (16.05.2023) செவ்வாய்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இறுதிக்கிரியையின் பின் பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் கனத்தை பொரல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி
077 734 0586
(cs 39842) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சப்ரகமுவ பல்கலைக்கழக

## கணினிப் பீடத்தின் முதலாவது பீடாதிபதியாக வசந்தப்பிரியன்!

சப்ரகமுவ பல்கலைக்கழக கணினிப் பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகப் பேராசிரியர் ச.வசந்தபிரியன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது பீடமாக கணினிப் பீடம் கல்வி அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் தாபக பீடாதிபதியாப் பல்கலைக்கழகப் பேரவையால் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த தரவு அறிவியல் துறையின் தலைவர் பேராசிரியர் ச.வசந்தப்பிரியன் கடந்த 3ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில் பீடச் சபையால் பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் - சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் ச.வசந்தபிரியன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 97ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவில் கல்வி கற்றவர். இவர் தனது கலாநிதிப் பட்டத்தை சீனாவின் வுஹான் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திலும், முதுகலை அறிவியல் பட்டத்தை எய்ந்தோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலும், கணினி விஞ்ஞானத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பெற்றார். (ம)

விளையாட்டுப் போட்டிக்காக

# பிரான்ஸுக்குச் சென்றிருந்த ஏழு இராணுவத்தினர் ஓட்டம்!

கொழும்பு, மே 15

**2023ஆம் ஆண்டுக்கான உலக இராணுவ டிரையத்லான் போட்டியில் (தடகள வகையான போட்டி) பங்கேற்பதற்காக, முப்படையைச் சேர்ந்த 13 பேர் கொண்ட குழுவினர் இலங்கையிலிருந்து சென்றிருந்த நிலையில், அவர்களில் 7 பேர் பிரான்ஸில் தப்பியோடியுள்ளனர்.**

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள், கடற்படையைச் சேர்ந்த ஒருவர் மற்றும் இலங்கை விமானப் படையின் இரண்டு அதிகாரிகள் ஆகியோரே தமது கடவுச் சீட்டுக்களைத் திருடிக்கொண்டு தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்ததால், போட்டியாளர்களின் கடவுச்சீட்டுக்கள் மூத்த அதிகாரி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும் குறித்த ஏழு பேரும் தங்களது கடவுச்சீட்டுக்களை திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நச்சுத்தன்மை கொண்ட தே.எண்ணெய் விற்பனை

பொதுமக்களே அவதானம்!

கொழும்பு, மே 15

நச்சுத்தன்மை கொண்ட, இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய், இலங்கையில் உள்நாட்டு வியாபாரக் குறியீட்டில் விற்பனை செய்யப்படுவதாக இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் பிரதான இணைப்பாளர் புத்திக டி சில்வா மேலும் தெரிவித்ததாவது:-

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் நச்சுத்தன்மை இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது. இது துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டமை பிரச்சினைக்குரிய விடயமாகும். இலங்கைக்கு தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்து வெவ்வேறு இரசாயனத் திரவங்களைப் பயன்படுத்தி அவற்றை தூய்மைப்படுத்தி சந்தைக்கு விடுவிக்கின்றமை தொடர்பில் முன்னதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் குறித்த தேங்காய் எண்ணெய் துறைமுகத்தில் இருந்து எவ்வாறு வெளியேற்றப்பட்டது? என்ற கேள்விக்குப் பதிலை அறிவதற்கு விசாரணைகள் தேவை - என்றார். (ம)

## நலன்புரிக் கொடுப்பனவை நிறுத்துவதற்குத் தீர்மானம்

வர்த்தமானி வெளியீடு

சமுர்த்தி கொடுப்பனவுகள் மற்றும் பொது உதவித் திட்டங்களை எதிர்வரும் 2026 ஆண்டிலிருந்து நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். ஆயினும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் சமூக நல கொடுப்பனவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம் 20 இலட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள். 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் சமுர்த்தி உள்ளிட்ட பொது உதவிகள் நிறுத்தப்படும்.

சமுர்த்தி வங்கி இதுவரை செலுத்திய நிதியுதவிகள், இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியால் செலுத்தப்படும் என ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

களுத்துறை

## சிறுமியின் இறப்புத் தொடர்பில் கோரப்பட்டது சிறப்பு அறிக்கை

கொழும்பு, மே 15

களுத்துறையில் 16 வயதுச் சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலும், பாடசாலை ஆசிரியர் ஒருவரால் பல மாணவிகள் துஷ்பிரயோகத்துக்குட்பட்டதாகச் சொல்லப்படும் சம்பவம் தொடர்பிலும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிக்கைகளைக் கோரியுள்ளது.

குற்றச் செயலின் தன்மை, அது தொடர்பில் நீதிமன்றுக்கு முன் வைக்கப்பட்டுள்ள சமர்ப்பணங்கள், தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரங்கள், அதில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் அவற்றுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (ம)

## செயற்கை நுண்ணறிவுக்கான திட்டத்தைக் கோரினார் ரணில்

கொழும்பு, மே 15

செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்ப வளர்ச்சியுடன் உலகம் முழுவதுமே அறிவுப் புரட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்தவேளையில் கொழும்பு பல்கலைக்கழகம் 10 ஆண்டு கால அபிவிருத்தித் திட்டத்தை முன்வைத்தால் அதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



இந்த 10 வருடகால அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் தயாரிப்பதற்குத் தங்களை அர்ப்பணிக்குமாறு மாணவர்களிடம் மேலும் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு செய்யாவிட்டால் கொழும்பு பல்கலைக்கழகம் அந்த விசேட செயற்பாட்டுக்குப் பங்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்தார். (ம)

## பூஸா சிறையில் கமரா செயலிழப்பு

கொழும்பு, மே 15

பூஸா சிறைச்சாலையில் பெரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் அடைக்கப்பட்டுள்ள சில அறைகளில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறைச்சாலையில் பொருத்தப்பட்டுள்ள சுமார் 120 கமராக்களில் சுமார் 20 கமராக்கள் தற்போது செயற்படாமல் இருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. வெலே சுதா, தெமட்டகொட சமிந்த, பொடி லெஸி உள்ளிட்ட பெரும் குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அறைகளின் கமராக்களே முடக்கப்பட்டுள்ளன. (ம)

## ஜி.பி.எஸ். கருவி பொருத்தி பேருந்துகள் கண்காணிப்பு

கொழும்பு, மே 15

பயணிகள் போக்குவரத்து பேருந்துகளின் இயக்கத்தை 24 மணி நேரமும் கண்காணிப்பதற்காக, பேருந்துகளில் ஜி.பி.எஸ். கருவிகளைப் பொருத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிராண்டோ இந்த விடயத்தை தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் மற்றும் அனைத்து தனியார் பேருந்துகளில் இந்த ஜி.பி.எஸ். வசதி பொருத்தப்படும். நெடுஞ்சாலையில் ஒரு நிறுத்தத்தில் நீண்டநேரம் நிறுத்தப்படும் பேருந்துகளைக் கண்டறிந்து அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க இது உதவும்.

மாகாணங்களுக்கிடையிலான நீண்ட தூர சேவைப் பேருந்துகளில் ஏற்கனவே ஜி.பி.எஸ். உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் அனைத்து பேருந்துகளிலும் ஜி.பிஎஸ். உபகரணங்களை நிறுவும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 430 அரச நிறுவனங்கள் தனியார் மயமாகின்றன

கொழும்பு, மே 15
430 அரச நிறுவனங்கள் விற்பனை செய்யப்பட அல்லது மறுசீரமைக்கப்பட வுள்ளன. இந்த செயன்முறை இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பித்து ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் என திறைசேரி அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.
நிதி அமைச்சு, இந்த 430 அரச நிறுவனங்களை நட்டம் மற்றும் இலாபம் ஈட்டும் உத்தேச மறுசீரமைப்பு செயல் முறைக்காக அடையாளம் கண்டுள்ளது.
முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ், சில நிறுவனங்கள் விற்கப்படும் சில நிறுவனங்கள் மூடப்படும் அல்லது இணைக்கப்படும் அல்லது மறுகட்டமைக்கப்பட வுள்ளன.
430 நிறுவனங்களில் 39 கூட்டுத்தாபனங்கள், 218 கம்பனிகள் மற்றும் 173 சட்டபூர்வ சபைகள் உள்ளன. இந்நிறுவனங்களில் 21 பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களும் அடங்குகின்றன.
பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை, சிறிலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, தேசிய வீடமைப்பு மேம்பாட்டு ஆணைக்குழு என்பன நட்டத்தில் இயங்குகியுள்ளன என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.
இதனைத் தவிர அரச பொறியியல் கூட்டுத்தாபனம், ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா பி.எல்.சி., லங்கா சதொச லிமிட்டெட், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், மைக்ரோ லிமிட்டெட், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், ஜரினன், தேயிலை சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தேசிய கால்நடை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் லங்கா லேலண்ட் லிமிட்டெட் என்பனவும் நட்டமடைந்துள்ளன.
இந்த நிறுவனங்களின் மறுசீரமைப்பு செயல்முறையை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சில் பொது தனியார் கூட்டாண்மைக்கான தேசிய நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.
(அ-ஓ.6)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்:

## குருதிக்கொடையளித்த சிங்கள இளைஞன்

யாழ்ப்பாணம், மே 15
முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவாக சிங்கள இளைஞனும் நல்லூரில் குருதிக் கொடையளித்துள்ளார்.
முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவிடத்துக்கு அருகில் நடைபெற்றது.
குருதிக் கொடை முகாமில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினர். இந்தக் குருதிக் கொடை முகாம் நிகழ்வில் தென்னிலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் தானாக முன்வந்து குருதிக் கொடை வழங்கியமை பலரதும் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.
(அ-ஓ.66)



குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கிராம ஊர்வலம் மேற்படி ஆலயத்திலிருந்து கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ய-66)

சிறுமி கடத்தல்;

## குடும்பத் தகராறே சம்பவத்துக்குக் காரணம்

முல்லைத்தீவு, மே 15
புதுக்குடியிருப்பு, கைவேலி பகுதியில் சிறுமி கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக, சிறுமியைக் கடத்த வில்லை என்றும் தந்தை கேட்டுக்கொண்டதற்கு இணங்க சிறுமியை அவரிடம் அழைத்துச் செல்ல முற்பட்டதாக கைதான இளைஞன் பொலிஸ் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளான்.
புதுக்குடியிருப்பு, கைவேலி பகுதியில் நேற்றுமுன் தினம் காலை, பெண்மணி ஒருவர் தனது 10 வயதுச் சிறுமியை தனியார் கல்வி நிறுவனத்தில் இறக்கியுள்ளார். அதேநேரம் மோட்டார் சைக்கிளில் வந்த 23 வயது இளைஞன் ஒருவர் சிறுமியைக் கடத்திச் செல்ல முற்பட்டவேளை பொது மக்கள் இளைஞனை மடக்கிப்பிடித்து பொலிஸிடம் ஒப்படைத்தனர்.
கைதான இளைஞனிடம் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணை நடத்திய போது, சிறுமியின் தந்தையார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சிறுமியை அழைத்துச் செல்லவே முற்பட்டதாக இளைஞன் தெரிவித்துள்ளான். சிறுமியின் பெற்றோர் குடும்பத் தகராறு காரணமாக ஒன்றரை வருடங்களாகப் பிரிந்து வாழ்கிறார்கள். தனது பிள்ளையைப் பார்க்க மனைவி அனுமதிப்பதில்லையெனக் குறிப்பிட்டு, சிறுமியின் தந்தை தன்னிடம் உதவி கோரியதாக இளைஞன் தெரிவித்தான். சிறுமியின் தந்தையும், கைதான இளைஞனும் நண்பர்கள். தனியார் வகுப்புக்கு வரும்போது, சிறுமியை அழைத்து வருமாறு தந்தை கேட்டதால், சிறுமியை அழைத்துச் செல்ல முற்பட்டதாகவும், சிறுமிக்குத் தன்னைத் தெரியாததால் கத்தி சத்தமிட்டதாகவும் இளைஞன் விசாரணைகளில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ.இ)





பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கலைவாணி கலைமன்றத்தினால் முழுநிலா அரங்கு வடலியடைப்பு கலைவாணி கலையரங்கில் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
நிகழ்வில் இசைநிகழ்வும், சிவன் தரிசன நாடகமும், விசேட நிகழ்வாக சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தினரால் அகோரி நடனமும் இடம்பெற்றது. (ய-125)



வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் செயற்றிறன் பரிமாற்ற நிதியினூடான முன்பள்ளி மாணவர்களுக்கான போஷாக்கு உணவு வழங்கும் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு சபையின் செயலாளர் சுதர்ஜனால் கடந்த 3ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ய-125)

### அர்ப்பணிப்புடன்...

மறைந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர் சபாரட்ணத்தின் மகனான இவர், ஈழப் போராட்டம் ஆரம்பமான நெருக்கடியான காலகட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பெரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஒருவர். தமிழ்த் தேசியத்தில் தீவிர பற்றுடையவர்.
இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் நிர்வாக விடயங்கள் தொடர்பான திட்ட வரைவையும் இவர் தயாரித்திருந்தார். இவரது இறுதிக்கிரியைகள் கொழும்பில் நாளை இடம்பெறவுள்ளன.
(அ-ஓ,5)

### இராணுவம்,...

பங்கேற்புடன் மருத்துவபீட வளாகத்தினுள் வெசாக் கொண்டாட்டம் நேற்று இடம்பெற்றுள்ளது.
இராணுவத்தினர் சிவில் உடையில் வளாகத்தினுள் பிரவேசித்து நிகழ்வுக்கான மேடை ஒழுங்கமைப்பு மற்றும் அலங்காரப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பிக்கு ஒருவர் அழைத்து வரப்பட்டு அவர் தலைமையில் வெசாக் வழிபாடுகள் நடைபெற்றுள்ளன.
கடந்த காலங்களில் மருத்துவபீடத்தில் சிங்கள மாணவர்களின் பங்களிப்புடன் மட்டுமே வெசாக் நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த ஆண்டு பிக்குவை அழைத்து நிகழ்வு நடத்தியிருப்பது தொடர்பில் ஏனைய மாணவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.
மருத்துவபீடத்தில் வழமையாக நடைபெறும் நிகழ்வுகளுக்காக அனைத்து ஆண்டு மாணவர்களிடமிருந்தும் பணம் சேகரிக்கப்படும். ஆனால், வெசாக் நிகழ்வுக்கு அதனை ஒழுங்கமைத்த அணி மாணவர்களிடமிருந்து மாத்திரமே சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிகழ்வுக்கான நிதிப் பங்களிப்பு வெளித் தரப்புக்களிடமிருந்தே இம்முறை வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்ற சந்தேகமும் வெளியிடப்பட்டுள்ளது.
மேலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டமையும் பல்கலைகழகத்தின் மருத்துவபீடம் உள்ளிட்ட ஏனைய பீடங்களிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.
(ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னோர்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தமிழர் தாயகத்தில் ஆரம்பமாகியுள்ளமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ரணில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'நினைவேந்தல் உரிமை இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் உண்டு. ஜனநாயக நாட்டில் எந்த இன மக்களினதும் உரிமைகள் பறிக்கப்பட இடமில்லை. அதேபோல்நினைவேந்தல் உரிமையையும் எவரும் தட்டிப்பறிக்க முடியாது. வடக்கிலுள்ளவர்கள் தெற்கிலுள்ளவர்கள் ஏனைய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் உறவுகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் நினைவேந்தலாம். ஆனால், அந்த நிகழ்வுகளை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது களங்கத்தை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது ஓர் இனத்துக்கு வெறுப்பேற்றும் வகையிலோ நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தக்கூடாது' என்றார் ரணில். (அ,ஒ,5,22)

## உயர்பாதுகாப்பு...

புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள சிமெந்து தொழிற்சாலையின் இயந்திரங்களை 2013ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் வெட்டி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தன. காலத்துக்குக்காலம் இந்த நடவடிக்கை இராணுவத் தினரின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் வாகனம் ஒன்றில் இரும்புகளை வெட்டி ஏற்றிச் செல்லத் தயாராகவிருந்த 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு உதவிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 3 பேரும் கைதாகினர். (அ-ஒ,23,26)

## புத்தர் சிலை...

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான ரியர் அட்மிரல் சரத்வீரசேகர.

திருகோணமலையில் நேற்று நிறுவப்படவிருந்த புத்தர் சிலை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'நாட்டில் வடக்கு - கிழக்குக்கு ஒரு சட்டம் என்றும், தெற்கில் இன்னொரு சட்டம் என்றுமில்லை. பொதுவாக ஒரு சட்டம் தான் உண்டு. சிங்கள - பௌத்தர்கள் நாட்டில் எந்தப் பகுதியிலும் சுதந்திரமாக வழிபடமுடியும். அவர்கள் விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் எந்த இடத்திலும் நிறுவமுடியும். அதை இனவாத, மதவாத அடிப்படையில் நோக்குவதை தமிழ்த் தரப்பினர் தவிர்க்கவேண்டும். தமிழ் மக்கள் நாட்டில் எங்கும் சென்றும் வழிபடலாம். அவர்கள் எங்கும் ஆலயங்களை அமைக்கலாம். இதற்கு எதிராக சிங்கள மக்கள் அன்றும் சரி இன்றும் சரி எதிர்ப்புக் காட்டவில்லை' - என்றார். (அ-ஒ,5,22)

## திருமலையில்...

**ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் எதிர்ப்புக்களையடுத்து அது** கைவிடப்பட்டது. இருப்பினும் போராட்டக்காரர்கள் அந்த இடத்திலிருந்து அகன்ற பின்னர் பிக்குகள் தலைமையில் வந்த சுமார் 500 பேர் புத்தர் சிலை வைக்க இருந்த இடத்தில் வழிபாடுகள் நடத்தினர்.

270 ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்திலிருந்து திருகோணமலைக்கு வந்து இறங்கியதாகக் கூறப்படும் பிக்குகளை நினைவுகூரும் முகமாகவும், அவர்களைக் கௌரவப்படுத்தும் முகமாகவும் அவர்கள் வந்து இறங்கியதாக மகாவம்சத்தில் கூறப்படும் திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் உள்ள தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் 4 அடி உயரமான புத்தர் சிலை தாய்லாந்திலிருந்து வரும் பிக்குகளால் வைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து புத்தர் சிலை வைக்க திட்டமிடப்பட்டிருந்த இடத்தில் தமிழ்த் தேசியப் பேரவையால் நேற்றுமுன்தினம் காலை முதல் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், புத்தர் சிலை வைப்பதால் இனமுறுகல் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டி திருகோணமலை மாவட்டச் செயலருக்குக் கடிதம் அனுப்பினார். அத்துடன்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் கவனத்துக்கும் கொண்டு சென்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புக்கு அமைவாக, புத்தர் சிலை வைக்கும் நிகழ்வை இடமாற்றுமாறு மாவட்டச் செயலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

புத்தர் சிலை வைக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை மாவட்டச் செயலர் நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து புத்தர் சிலை நிறுவுவதற்காகத் திட்டமிடப்பட்ட நேரம் வரையில் அங்கிருந்துவிட்டு போராட்டக்காரர்கள் வெளியேறினர்.

இதற்கிடையில், திருகோணமலை மணிக்கூட்டுக்கோபுரத்தின் அருகில் நேற்றுக்காலை ஒன்றுகூடிய சிங்கள மக்கள் பிக்குகள் தலைமை தாங்க ஊர்வலமாக வந்து நெல்சன் தியேட்டருக்கு முன்னால் உள்ள தொல்பொருள் திணைக்களத்தால் எல்லைப்படுத்தப்பட்டு மூடப்பட்ட பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து சமய அனுட்டானங்களை மேற்கொண்டனர். இதனால் திருகோணமலை நகரப்பகுதியில் பதற்ற நிலை உருவாகியது.

பொலிஸார் வந்தவர்களைத் தடுக்க முற்பட்டபோதிலும் அது முடியாமற்போன நிலையில் அத்துமீறியவர்கள் வளவுக்குள் புகுந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். அதன்பின் அவ்விடத்தில் விசேட இராணுவப்பிரிவினர் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். (அ-ஒ,5)

## தமிழர்...

அம்பாறை திருக்கோயில் பிரதான சந்தை வளாகத்தில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினருடன் இணைந்து இது முன்னெடுக்கப்பட்டது. திருக்கோயில் பகுதியில் உள்ள வீடுகளில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளும், பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து ஒரு பிடி அரிசி பெற்று முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் காய்ச்சினர்.

**அங்கிருந்து அம்பாறை [illegible] பகுதியில் அமை[illegible] படுகொலை நினைவுத்தூபியில் உயிர்**நீத்த உறவுகளுக்கு நினைவேந்தி விநாயகபுரம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியும் துண்டறிக்கையும் விநியோகிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக அம்பாறை, பொத்துவில் சாலம்பையடி பிள்ளையார் ஆலயத்தின் முன்பாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

பொத்துவிலில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்ட பகுதிக்கு திடீரென வாகனத்தில் வருகை தந்த பொலிஸார் மாணவர்களிடம் விசாரித்து பின்னர் சற்று நேரம் கண்காணித்துச் சென்றனர். பின்னர் திடீரென இராணுவச்சீருடையில் ஒருவர் வருகைதந்து நோட்டமிட்ட நிலையில் புலனாய்வாளர்கள் ஒளிப்படமும் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் அம்பாறையில் நிறைவு பெற்ற நிலையில் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் இன்று தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ஒ,125)

## ரணில் - ...

கடந்த 11ஆம் திகதி வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் முதல் சுற்று சந்திப்பு நடைபெற்றது. அதிகாரப் பகிர்வு தொடர்பான இரண்டாவது சந்திப்பு மறுநாள் 12ஆம் திகதி இடம்பெறவிருந்தபோதும், நாடாளுமன்றத்தில் அன்றையதினம் வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டியிருந்தமையால் பேச்சு இன்று வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இன்று இடம்பெறவுள்ள சந்திப்பில் வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-ஒ,5)

## வன்முறைக்...

கும்பலாக இயங்கிய குழுவை யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

அரியாலை, பூம்புகாரில் இந்தக் குழு இயங்கியுள்ளது. வாள்களுடனும் கூரிய ஆயுதங்களுடன் 15 தொடக்கம் 22 வயது வரையிலுள்ள சுமார் 20 க்கும் மேற்பட்டவர்கள் இந்தக் குழுவில் செயற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. 'வட்ஸப்பில்' குழு உருவாக்கி அதில் வாள்கள் மற்றும் ஆயுதங்களுடன் உள்ள ஒளிப்படங்களைப் பகிர்ந்து வெளிநாட்டிலிருப்பவர்களிடம் பணத்தை வாங்கி அவர்கள் சொல்லும் வன்முறைச் சம்பவங்களை இவர்கள் இங்கு மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது. (அ-ஒ,5)

## உணவுப்பொதி...

பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டமைக்குக் காரணம் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

பிரதமராக மஹிந்த ராஜபக்ச நியமனம் பெறவுள்ளாரென்றும் அதற்காகவே கொழும்பில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் பரபரப்புத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், கொழும்பு பல்கலைக்கழக **பழைய மாணவர் ஒன்றுகூடலுக்காக 2 ஆயிரம் உணவுப் பொதிகளுக்கு முன்**பதிவு செய்யப்பட்டதை, தவறாகப் புரிந்து கொண்டதே கொழும்பில் திடீர் பாதுகாப்பு அதிகரிப்புக்குக் காரணமெனத் தெரியவந்துள்ளது.

கொழும்பு பல்கலைகழகம், காலிமுகத்திடல், தும்முல்லை சந்தி உள்ளிட்ட பல பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பொலிஸார், ஆயுதம் ஏந்திய இராணுவம், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் களமிறக்கப்பட்டிருந்தனர். உளவுத்தகவல் ஒன்றினடிப்படையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்தார். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், வார இறுதியில் கொழும்பு நகரில் திடீர் முற்றுகையில் ஈடுபட்டு, அரச நிறுவனங்களைக் கையகப்படுத்தி, புதிய போராட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும், இதில் 750 பேர் வரையில் பங்கேற்பார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

கொழும்புப் பல்கலைகழக பழைய மாணவர் தரப்பினர், 2 ஆயிரம் உணவுப் பொதிக்கு முன்பதிவு செய்திருந்த தகவலை உளவுத்துறை பெற்றதைத் தொடர்ந்தே, இந்தப் புலனாய்வுத் தகவல் வெளியிடப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

சனிக்கிழமை பழைய மாணவர் ஒன்றுகூடல் நடைபெற்றதாகவும், அதற்காகவே இந்த உணவுப் பொதிகள் முன்பதிவு செய்யப்பட்டதாகவும் அதனை போராட்ட முன்னேற்பாடு எனப் பாதுகாப்புத் தரப்பு நினைத்து விட்டதாகவும் இப்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேல்மாகாண மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் கீழ் இயங்கும் விசேட புலனாய்வுப்பிரிவே இந்தத் தகவலை வழங்கியதாகவும் அதனடிப்படையில் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகின்றது. அடிப்படையற்றபுலனாய்வுத்தகவல்களால் பாதுகாப்புத் தரப்பினரை அலைக்கழித்தமை உட்பட்ட பல விடயங்களால் ஜனாதிபதி கடும் அதிருப்தி கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ=ஒ,இ)

## குமுதினிப்...

நேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி சிறப்புப் பூஜையும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை குமுதினிப் படுகொலை நினைவேந்தல் குழுமத்தின் தலைவர் வி.ருத்திரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் நினைவுத்தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் 'குருதியின் குமுறல்கள்' என்ற கவிதை நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. நிகழ்வின் இறுதியில் நினைவாலய வளாகத்தில் நினைவு மர நடுகையும் இடம்பெறவுள்ளது.

**குமுதினிப் படுகொலை**

1985ஆம் ஆண்டு மே 15ஆம் நாள், நெடுந்தீவின் மாவலித்துறையிலிருந்து நயினாதீவின் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு குமுதினிப் படகில் சென்ற பயணிகள் சிறிலங்கா கடற்படையினரால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 7 மாதக் குழந்தை உள்ளடங்கலாக குழந்தைகள், பெண்கள் உட்பட மொத்தம் 33 பேர் குத்தியும் வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். (அ-ஒ,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடிகாமம் - வரணி கலாசார மத்திய நிலைய மாணவர்களின் கலை பயில்வை மேம்படுத்த ஒலிபெருக்கி சாதனம் ஒன்று கலா சார மத்திய நிலைய அபிவிருத்தி குழு உறுப்பினர் இ.சுதாகரனால் கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை அன்பளிப்புச் செய்யப்பட்டது. (ய-159)



மந்துவில் கிழக்கு சின்னச்சந்தையில் 150 வருடங்களாக நின்ற புளியமரம் கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த காற்றுடன் கூடிய மழையினால் பாறி விழுந்துள்ளது. (ய-159)

# கலிபோர்னியாவில் சாதிப் பாகுபாடு தடை

## சட்டவரைவு நிறைவேற்றம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் சாதி அடிப்படையில் பாகுபாடு பார்ப்பதை தடை செய்யும் சட்டவரைவு நிறைவே ற்றப்பட்டுள்ளது.

மாநிலத்தின் செனட் சபையால் தாக்கல் செய்யப்பட்ட சட்டவரைவுக்கு விவாதத்துக்குப் பின் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் 34 வாக்குகள் ஆதரவாகவும் ஒரு வாக்கு எதிராகவும் பதிவாகியது.

அதனால் சட்டவரைவு நிறைவேறியது.

அதற்கமைய அமெரிக்காவில் இது போன்ற சட்டவரைவை நிறைவேற்றும் முதல் மாநிலமாக கலிபோர்னியா விளங்குகின்றது.

கலிபோர்னியாவில் சாதிப் பாகுபாட்டுக்கு இடமில்லை என்ற வலுவான செய்தியை இந்தச் சட்டவரைவு வழங்கியுள்ளதாக சட்டவரைவை முன்வைத்த செனட்டர் ஆயிஷா வகாப் தெரிவித்துள்ளார்.

விரைவில் சட்டவரைவை கலிபோர்னியா சட்டசபையில் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப் படும் என அவர் குறிப்பிட்டார். (ச-இ)


**வீடு வாடகைக்கு**

ஸ்ரான்லி வீதியில்
வீடு வாடகைக்கு உண்டு
(மாணவர்கள் விரும்பத்தக்கது)

**071 057 1076 (Normal)**
**078 302 8838 (Whatsapp Viber)**


**தேவை**

அலுவலகம் ஒன்றிற்கு O/L படித்த (25 வயதிற்குட்பட்ட) பெண்கள் தேவை. (CS 50414)(k-1)

**தொடர்பு : 077 4271512**

**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் கீரிமலையில் 84 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
* கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல். நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள். வியாபார நிலையங்கள். சுற்றுலா விடுதிகள். வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* காணியின் வடக்கு எல்லை கடல். தெற்கு எல்லை பிரதான காப்பற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
* ஒரு பரபப்பின் விலை - பத்து இலட்சம் ரூபாய். (1000000/=)



(CS 24849) A-1

**தொடர்பு: 076 911 9371**
**076 7390 413**
**077 8748 135**


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 . 12 . 1946 | | 14 . 05 . 2023 |



### திருமதி நகுலேஸ்வரி பாலசிங்கம்

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் சீரணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி பாலசிங்கம் நேற்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சின்னத்துரை பாலசிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியாரும். இரட்னேஸ்வரி (சண்டிலிப்பாய்). புஸ்பராணி (இணுவில்). ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி). தெய்வராணி (கோண்டாவில்). சுகிர்தராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். விஜிதா (ஜேர்மனி). வனிதா (ஜேர்மனி). சுகிதா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும். பரமேஸ்வரன் (ஜேர்மனி). விஜயகுமாரன் (ஜேர்மனி). சுதாகரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும். வாகீசன். கிருசன். ஜீவேனி. விஜிதன். விதுஷா. வைஷ்ணவி. பிரியன். கீதானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (17.05.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**விஜிதா- 076 306 1277**
**கஜன்- 076 614 0648**

## மரண அறிவித்தல்



### முருகேசு சிவகடாட்சம்

தோற்றம் 10.12.1948 — மறைவு 13.05.2023

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் எழுவைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவகடாட்சம் கடந்த (13.05.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும். குகலட்சுமியின் அன்புக் கணவரும் கமலேஸ்வரனின் அன்பு தந்தையாரும். அயிலவன் - கோபிகா அவர்களின் அன்புப் பேரனும். தன்சிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2023) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

566/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 877 9408

(CS 50399)(k-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.